# திருமண முன்னேற்பாடு

## குலதெய்வம் வழிபாடு - முன்னோர் வழிபாடு

### முதல் பத்திரிக்கை:

முதல் பத்திரிக்கையை குலதெய்வம் கோவிலில் அபிஷேகம் செய்து வழிபட்டு இறைவனுக்கு சமர்பிக்கவேண்டும். கிராமத்து அம்மன் கோவில் பூஜாரிக்கு வேஷ்டி - துண்டு தானம் செய்யவும்.

### குல தெய்வம் வழிபாடு:

பந்தக்கால்-நலுங்கு முன்னர் குலதெய்வத்திற்கு பொங்கல் வைத்து, அம்பலி உற்றுதல் செய்து வழிபட வேண்டும். காலையில் பசுவிற்கு 3 கிலோ கோதுமை தவிடு, ¼ கிலோ வெல்லம் கலந்து தானம் செய்யவும்

### மூதாதையர் வழிபாடு:

இறந்த மூதாதையர்களின் ஆசீர்வாதம் வேண்டி அவர்களுக்காக படையல் பூஜை செய்து - ஏழைகளுக்கு வேஷ்டி, புடவை, பாவாடை துணி தானம் செய்யவேண்டும். காலையில் பசு, எருமை மாட்டிற்கு 3 கிலோ கோதுமை தவிடு, ¼ கிலோ வெல்லம் கலந்து தானம் செய்யவும்

### பொன் உருக்குதல் (தாலிகயிறு, தாலிபொட்டு விலைக்கு வாங்குதல்)

பந்தக்காலுக்கு முன்னர் அல்லது பந்தக்கால் அன்று அஷ்டம சுத்தியான நேரத்தில், மணமக்களுக்கு சந்திராஷ்டமம் இல்லாத நாளில் பொன்உருக்க, தாலி பொட்டு, தாலி கயிறு புதியதாக விலைக்கு வாங்குதல் நன்று.

### பந்தக்கால் நடுதல்:

திருமணத்திற்கு மூன்று அல்லது ஐந்தாம் நாளில் அதிகாலையில் (சூரிய உதயத்திற்கு முன்னர்) இளம் பச்சை மூங்கிலுக்கு அபிஷேகம் செய்து வாசலில் கிழக்கு அல்லது வடக்கு புறத்தில் நடுதல் நன்று. (இதற்கு புரோகிதர் தேவையில்லை).

இன்று முதல் திருமணநாள் வரை தினமும் காலையில் பசுவிற்கு 3 கிலோ கோதுமை தவிடு, ¼ கிலோ வெல்லம் கலந்து தானம் செய்யவும்

### நலுங்கு:

பந்தக்கால் அன்றே நலுங்கு வைத்தல் நன்று. திருமண மேடையில் வைக்கும் நலுங்கு உட்பட ஒற்றைப்படை எண்ணிக்கையில் இருத்தல் நன்று.

### திருமணத்திற்கு பின்னர்:

வேண்டுதல் மற்றும் குலதெய்வம் வழிபாடு செய்யவும். நவதான்யத்தை வயலில் விதைத்தல் அல்லது ஆறு அல்லது ஏரியில் கரைத்தல் நன்று

**பாலு சரவண சர்மா**

தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர் - ஜோதிடர் - பஞ்சாங்க கணிதக்ஞர்

எண் 9, 4வது தெரு, கல்யாண நகர், தாம்பரம் - மேற்கு, சென்னை 45

தொலைபேசி எண் 98403 69677 ( 1மணிக்கு மேல் தொடர்பு கொள்ளவும்)

| prohithar@gmail.com | http://www.prohithar.com | http://www.thanigaipanchangam.com |